உ

சிவமயம்



இருபாலையை பிறப்பிடமாகவும்

கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி
# செல்லையா சின்னத்துங்கம்

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவுமலர்

21.02.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாலையை பிறப்பிடமாகவும்

கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட

# திருமதி
# செல்லையா சின்னத்தங்கம்

அவர்கள்


இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவுமலர்

## 21.02.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எங்கள் எல்லோரினது இதயங்களிலும்
இன்முகத்துடன் குடிகொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே, நாம் தங்கள் பாதங்களில்
கண்ணீருடன் சூட்டும் இந்த ஞாபகார்த்த மலரை
ஏற்றுக்கொள்ளுங்கள்.

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வாழ்வெனும் கனவில் நின்றும் விழித்துக்
கொண்ட அன்புத் தெய்வம்

மண்ணில்
07
*
05
*
1920



விண்ணில்
22
*
01
*
2002

# திருமதி
# செல்லையா சின்னத்தங்கம்

## தித்தித்த திதி

விளங்குபுகழ் விஷு வாண்டே வீசுபுகழ் தையில்
உளங்கொளவே உற்றபூர் வபக்க அட்டமியில்
செம்மை சீர் கந்தரோடை செல்லையா சின்னத்தங்கம்
அம்மையதே வீடுற்றார் அணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணப் பாடல்கள்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர்காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே

## திருவாசகம்

நாடகத்தாலுன்னை உனடியார்போல் நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச் சீர்மணிக் குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்திடு ளெம்முடையானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீரோங்கி வளர் கமல
நீர் பொருந்தாத் தன்மையன்றே
ஆரோங்கி முகமலர்ந்தாங்(கு)
அருவினையேன் திறம் மறந்தின்(று)
ஊரோங்கும் பழி பாரா(து)
உன்பாலே விழுந்தொழிந்தேன்
சீரோங்கும் பொழில் கோடைத்
திரை லோக்கிய சுந்தரனே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போய் அகல
பொன்னின் செய் மண்டலத் துள்ளே புகுந்து
புவன யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமை கோன்
அடியோருக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

வெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி செல்லையா சின்னத்தங்கம் அவர்கள்

## 22.01.2002ல் சிவப்பேறு பெற்றார்

## அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்

தென்னம் சோலையும் நெல்விளை நிலங்களும் கற்பக வினாயகர் ஆலயமும் செழிப்புற விளங்கும் இருபாலையில் வைத்திலிங்கம் மாலாத்தை தம்பதிகளின் ஐந்தாவது புத்திரியாக சின்னத்தங்கம் 1920ம் ஆண்டு பூமியிலே அவதரித்தார். வளர்ந்து படிக்கும் பருவம் அடைந்ததும் பெற்றோர்கள், இருபாலை தமிழ் பாடசாலையில் கல்வி கற்பித்தனர் பின்னர் அவர் மூப்பெய்தி திருமணப்பருவம் அடைந்ததும் செல்லையாவின் சிறிய தந்தையான செல்லப்பா அவர்கள் சின்னத்தங்கத்துக்கும் செல்லையாவிற்கும் சைவ சமய ஆசாரப்படி திருமணம் செய்து வைத்தார். கந்தரோடையில் வாழ்ந்து வந்த சிறிய தந்தையான செல்லப்பா அவர்கள் செல்லையா சின்னத்தங்கம் இருவரையும் சிரேஷ்டபுத்திரன் இராசரத்தினத்தையும் இருபாலையில் இருந்து அழைத்து வந்து தனக்கு உதவியாக கந்தரோடையில் வாழ்க்கை நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்து கொடுத்து செல்லையா குடும்பத்தினர் தொடர்ந்து கந்தரோடையில் விவசாயம் செய்து வாழ்ந்து வரும் காலத்தில் மேலும் மக்கள் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர். மூத்த மகன் திரு. இராசரத்தினம், உருக்குமணிதேவியை மணந்து வாழ்ந்து வருகிறார், பெண்மகள் மனோரஞ்சிதம் திரு. இ.வீரசிங்கம் அவர்களையும். கமலாதேவி யா.இ.போ.சபையில் சேவையாற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற கந்தசாமி அவர்களையும் திரு. இலங்கநாதன், கோகிலாம்பிகையையும் சுன்னாகம் தெற்கு கிராம அலுவலராக பணிபுரியும் திரு.வைத்தியநாதன், காங்கேசன்துறை லங்கா சீமேந்து லிமிட்டெட்டில் வேலை பார்க்கும் பெண்மணி சிவயோகம் அவர்களையும் ஞானதேவி (கனடா) ஜெகநாதனையும் திரு. ஜெயநாதன் (மட்டக்களப்பு தெங்கு அபி.சபை) ஆசிரியை தமயந்தியையும், யோகாதேவி (பிரான்ஸ்) மனோகரன் (பிரான்ஸ்) அவர்களும் திருமணம் செய்து வாழ்கின்றனர். அமரத்துவம் அடைந்த அம்மையார் சின்னத்தங்கம் அவர்கள் எவருடனும் இன்முகத்துடன் பேசி எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகி வந்தார். அம்மையாரின் ஒரே நோக்கு தனது பிள்ளைகள் நன்றாக கல்வி கற்று நல்ல நிலையில் வரவேண்டும் என்பதே. அதற்காக அவர் தன்னை முழுமையாக அற்பணித்து பிள்ளைகளுக்கு, மூத்தமகனான இராசரத்தினத்தின் பெரும் முயற்சியால் இளையபிள்ளைகளை கல்வி கற்பிக்க பெரும் கஷ்டப்பட்டு வந்தார். அதே நேரம் விவசாயத்தால் வரும் வருவாயைக் கொண்டு மிகவும் பொருளாதார கஷ்ட நிலையிலும் தன்னால் ஆனவரை பாடுபட்டு வளர்த்து வந்ததை உற்றார், ஊரவர்கள் நன்கு அறிவர். அவரின் நற்குண நற்செயலே பிள்ளைகள் நல்ல நிலை வருவதற்கு உறுதுணையாக நின்றது. என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மை. இந்நிலையில் வாழ்க்கை துணைவனான கணவர் திரு. செல்லையா அவர்கள் 1990ம் ஆண்டு இயற்கை நியதிப்படி சிவபதம் அடைந்தார். அதன்பின் பிள்ளைகளின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் நாளில் கந்தரோடையில் இருக்கின்ற பெண்பிள்ளையாகிய வீரசிங்கத்தின் மனைவி மனோரஞ்சிதத்துடன் பிற்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை நடாத்தி வந்தார். வயது முதிர்ந்த காலத்தில் ஏற்ப்படுகின்ற நோய்க்கு ஆளாகி மருந்தும் கையுமாக நோயுற்று இருந்தாலும் அவரின் மரணம் மிக சுகமாக தொல்லைகள் எதுவும் இன்றி நிகழ்ந்ததை யாவரும் அறிவர். இது ஒருவரின் மரணத்தில் இருந்து அறிய முடிகின்றது. அவர் எப்படி வாழ்ந்தார் என்பது அம்மையாரின் மரணம் இதற்கு சான்று பகர்கின்றது.

கனவில் கிடைத்த தனமும் கீர்த்தியும்
வியப்பில் வறுமையைப் போக்கிடாது போல
உலகில் கிடைத்த தனமும் கீர்த்தியும்
உண்மை சுகம் பெற உதவிடாது

(உண்மை என்பது எல்லா உயிர்களுக்கும் இறப்பேயாகும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாமல் போனதே அம்மா

பத்துமாதம் சுமந்து பெற்ற தங்கள் மகள்
        பனிபடர்ந்த நாட்டிற்கு வந்ததனால் – தங்களைப்
பல காலம் பார்க்காத பாவிகளாய்
        பரிதவித்து நிற்கின்றேன் அம்மா
தூரத்தில் இருந்து கொண்டு துயரத்தில் வாடுவது
        துன்பத்திலும் துன்பமம்மா

என் கணவன் கனடா சென்றிருந்தவேளை
        எம்முடனே இருந்து எவ்வளவோ செய்தீர்கள்
நாம் கனடா வந்தபோது கொழும்புவரை
        நம்முடனே வந்துநின்று வழியனுப்பி வைத்தீர்கள்
எம்மைவிட்டு நீங்கள் பிரியும் அவ்வேளை
        எம்மால் உங்கள் பக்கத்தில் இருக்க
முடியாமல் போனதே அம்மா.

சின்னவர்களாய் நீங்கள் வளர்த்த சிந்துஜன் + சிந்துஜாவை
        பெரியவர்களாய் கூட்டிவந்து பெருமையுடன்
நாம் காட்ட முடியாமல் போனதே அம்மா
        நான் அடித்தபோது அம்மம்மாவென்று ஓடிவந்து
உங்களிடம் அடைக்கலம் புகுந்த எம்
        மூத்தமகள் இந்து இறுதியாண்டை முடித்துப்
பல்கலைக்கழகம் புகவுள்ளாள் என்பதனைத்
        தொலைபேசியிலேனும் சொல்லிமகிழ முடியாமல் போனதே அம்மா

எம்கடைக்குட்டி ஜலயாவுக்கு அம்மம்மாவை
        அவ்வளவாக ஞாபகம் இல்லை என்று நாம் சொன்னபோது
அவள் அழுது கொண்டே 'அம்மம்மா என்கையைப் பிடித்து
        நேசறிக்குக் கூட்டிப் போனவ' அப்படிச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமென்று சொல்லி அழுவதைப் பார்க்க
எம்மால் தாங்க முடியவில்லையம்மா
உங்களைப் பார்ப்போம் என்று எண்ணியிருந்த
எம் பிள்ளைகள் ஏமாந்து நிற்கிறார்களேயம்மா

அம்மா நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்த முதல்கிழமை
தங்கையவள் யோகாவும் நானும் தங்களுடன்
தொலைபேசியில் பேசிமகிழ நெடுநேரம்
முயற்சித்தும் முடியாமல் போனதே அம்மா
அவ்வேளையில் எவ்வளவோ சொல்ல வேண்டுமென்று
எண்ணியிருந்தும் ஏனோ எதுவும் பேசிமகிழ
எம்மால் முடியாமல் போனதே அம்மா
நாம் புதுமனை வாங்கியுள்ள செய்திதனை முதலில்
உங்களிடம் தான் சொல்ல வேண்டுமென்று
இரவெல்லாம் விழித்திருந்து தொடர்பு கொள்ள
முடியாமல் போனதே அம்மா

இவ்வாண்டு ஆடிமாதம் என் தங்கையவள்
தன் குடும்பத்துடன் வந்துநின்று தங்களை
மகிழ்வித்துவர எண்ணியிருந்தாளம்மா
அவளிடம் நான் சொல்லியிருந்தேன் இவ்வாண்டு
நீ சென்றுவர, அடுத்தாண்டு நானும் பிள்ளைகளும்
அம்மாவிடம் வருவதாகச் சொல்லிவிட்டுவாவென்று
இவ்வேளையில் இப்படி இடியொன்று வந்தால்
எப்படியம்மா எம்மால் தாங்கமுடியும்
இன்னும் கொஞ்சம் வாழ்க்கை வாழ்ந்து
எம்மைப் பார்த்துவிட்டுப் போவதற்கு
உங்களுக்கும் முடியாமல் போனதோ அம்மா

ஜெகநாதன் – ஞானதேவி
பிள்ளைகள்.
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் அம்மாவுக்கு.....

பத்துமாதம் சுமந்தாய் பக்குவமாய்ப் பெத்தெடுத்தாய்
எத்தனையோ கஷ்டங்களை எமக்காக நீ பொறுத்தாய்
இத்தரையில் நாம் சிறக்க இயன்றவை யெல்லாம் செய்தாய்
உத்தமியே! எம்முயிரே! உன்னை நினைந்தேங்குகின்றோம்

ஆயிரமா யிரம் மைலுக் கப்பால் நீ இருந்தாலும்
தாயன்பை உன் குரலில், செயல்களிலே நீ சொரிந்தாய்
நேயமிகும் செந்தூரன், சோனியா சீதுவனாம்
ஆய உந்தன் பேரரிங்கு ஆற்றாது அழுகின்றார்.

தங்கத் தாயே! சின்னத் தங்கம் என்னும் அம்மாவே!
உன்கை ஊட்டிய சோறும் பாலும் உயர்வாம் அமுதன்றோ?
இங்கே பிரான்சில் உன்னையே தினமும் நினைவிற்
கொண்டுள்ளோம்
எங்கள் இதயக் கோவில் வாழும் தெய்வம் நீ அம்மா

அன்பு மகள்
யோகா குடும்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் பாசமிகு மாமிக்கு
# மருமகள் குஞ்சு எழுதும்......

எடுப்பான தோற்றம் கொண்ட என்
மாமியார் தெய்வமானார் என்ற செய்தி
என்னால் நம்ப முடியவில்லை

பிறந்த வீட்டுக்கு நிகராக
புகுந்த வீட்டிலே அன்பான அழகான அறிவுள்ள
கணவரின் அன்பு கிடைத்தமை
என் பாக்கியமே – அதற்குக் காரணமான
அந்த அன்பு தெய்வம் இன்று தெய்வத்துள்
ஒன்றாகி விட்டார்

இனி, அந்த அன்பு தெய்வத்தை காண்பேனா?
எடுப்பான தோற்றம் இனிய சுபாவம் நிறைந்த
அன்பு, என்பவற்றிற்கு நிகர் அவரே தான்
கண்டிப்பில் கூட ஒரு கனிவு அவருக்குரிய
ஒரு தனிப்பண்பு

மருமகள் என்று கவனிக்காமல் 'குஞ்சு' என்று மகள்
போல் அன்பு காட்டி வேண்டும் போதெல்லாம்
வேண்டியவை செய்து தரணியில் தலைநிமிர
செய்து புகழ் பெறச் செய்தவர் – இன்று தெய்வமாகிவிட்டார்.

அன்புடன் மகள் குஞ்சு

"நெருதல் உளனொருவன் இன்றில்லை - என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

'வள்ளுவன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளே ஏன் இப்படித் துரோகியானாய்?

கல்வி மான் ஆக்கி வைத்த தெய்வம் அம்மாவே
ஆசைமுகம் பார்ப்பதற்கு அன்பு மொழி கேட்பதற்கு
நேசமுடன் அணைப்பதற்கு நிமிடம் கிடைப்பதற்குமுன்
நிமலன் தாழ் சேர்ந்துவிட்டீர் கணப்பொழுதில்
நேசக்கரம் நீட்டி நிற்கின்றேன் அன்பு மகன் இராசா

கல்விப் பெருஞ்செல்வம்  பெற்ற கணவனை எனக்குத்தந்து
குழந்தைகள் பெற்று குதூகலமாக வாழும் எம் வாழ்வில்
மாமி உங்களை மறந்து வாழ முடியாத பிரிவை எண்ணி
மனம் கலங்குகின்றேன் மருமகள் தமயந்தி தானே

அப்பம்மா அப்பம்மா என்றழைப்பதற்கு
ஆசையுடன் தேடுகின்றேன்
ஓடி வரமாட்டீர்களா அப்பம்மா – என்று
பீதியுடன் தேடும் கோபி தானே

கற்பனை செய்கின்றேன் அப்பம்மா
கவலைதான் பெருகுகிறதே அப்பம்மா
சொப்பனம் தான் காண்கின்றேன் அப்பம்மா
தங்கள் சோதிமுகம் காண்பதெப்போ என்கின்றார் சோஜிதா

வடக்கில் நீங்கள் கிழக்கில் நாங்கள் – என்று
அமைந்த வாழ்வினால் நீங்கள் நிமலன் தாழ்
சேர்வதை நின்று பார்ப்பதற்கு முடியவில்லையே – உங்கள்
ஆத்ம சாந்தி கிரிகைக்கு அன்பு மலர்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்பு மகன்
ஜெயநாதன் குடும்பம்
(ராசா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றாது அரற்றுகின்றோம்

# தோற்றுமா ஆறுதல் வார்த்தை

அமுதூட்டி வளர்த்த அன்பு அம்மம்மா
சித்திரம் போல உங்கள் மேனி சிதையாது என்றிருந்தோம்
அற்புதமாய் மறைந்தது என்ன எடுத்து இயம்பும்
வித்தகராம் விஜியும் தங்கை ஜெசியும் வேண்டுகின்றோம்
— எமக்கதனை

அனுசியா என்றழைக்கும் அன்புமொழி கேட்பதற்கு
கனிவாக நிற்கின்றேன் காலமெல்லாம் காத்து
நிலவு காட்டி நீங்கள் கூறும் அன்பு மொழி கேட்டு
அமிர்தம் கிடைத்தது என்றிருந்தோம் பாட்டி
முற்றம் எல்லாம் தேடுகின்றான் முரளி
சத்தம் இல்லாமல் தேடுகின்றாள் சகானா
போன இடம் சொன்னால் பின் தொடர்வோம் பாட்டி

நிலவு என்றிருந்தோம் நிலையானது என்றிருந்தோம்
பிரான்சில் இருந்தாலும் பிரியாது என்றிருந்தோம்
ஓடி ஒழித்து விட்டீர் ஒரு கணத்தில்
தேடித் திரிகின்றோம் ஜெயாவும் கௌரியும்
ஓடி வருவீர்கள் எம்மிடத்தில் அம்மம்மா
பாட்டி வருவா என்று பாதையெல்லாம் பார்த்திருந்தாள் ஸ்ரவனி
பாட்டி வரவு காணாது ஏங்குகிற மகலியை
தேற்றுகின்றோம் நாம் சேர்ந்து

உங்கள் அமுத மொழி கேட்டு அழுகை நின்றது
எங்கள் மழலை மொழி கேட்டு மயங்கினீர்கள்
உங்கள் பிரிவுச் செய்தி கேட்டுத் திணறுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனும் திலோவும் லண்டனில்
உங்கள் பொன்னான வார்த்தையினால் ஆறுதல்
கூறுங்கள் அம்மம்மா
பூட்டி வரவு பார்த்து ஏங்குகின்றான் ஜஸ்ரின்
தேடி வாருங்கள் அவனைத் தேற்ற அம்மம்மா

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்
பேரப்பிள்ளைகள் ஜெயா, மோகன், விஜி, ஜெசி

## திருக்குறள்.

அறம் பாயிரம். அதிகாரம் 1

கடவுள் வாழ்த்து.

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்கே உலகு.

2. கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நன்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

4. வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்துவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தான்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா உனைத்தேடி

பத்து மாதம் எனைச் சுமந்த
பாசமிகு அம்மாவே!
மூவிரண்டு ஆண்டுகள் - உன்
முகம்பார்க்க முடியவில்லை
தாயாக நீயிருந்து காட்டிய தயவுகளிற்கு
தரணியிலே ஈடில்லை - அதனால்
தடைவிரைவில் நீங்கிவிடும்
தாயே நான் உன்னை தழுவிடலாம்
என்றிருந்தேன்
விதி செய்த சதியாலே - நீ
விரைந்தோடிப் போய்விட்டாய் - என்ற
செய்திதான் எட்டியது - ஆனாலும்
நம்ப முடியவில்லையம்மா
ஈரைஐந்து மாதங்கள் எனைச் சுமந்து
இவ்வுலகைக் காண்பித்தாய்
இருநூறு மைல் தொலைவில் இருந்தும் - உன்னை
இறுதியில் காணக் கொடுத்து வைக்கவில்லை
அன்னையே உன்
சொர்க்கத்து முகவரியை கொடுத்தவிடு
அங்கும் உன் பிள்ளைகளாகவே பிறந்துவிட

க.கமலாதேவி (மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா நீ எங்கே......

அன்பின் பிறப்பிடமே அம்மம்மா!
ஆறாண்டு காலம் உங்களைப் பிரிந்திருந்தோம்
அகன்று விடும் அல்லல்கள்
அணைத்திடலாம் உங்களை என்ற
ஆவலுடன் காத்திருந்த எங்களை,
மீளாத்துயிலில் நீங்கள் மாண்டுவிட்டீர்கள் - என்ற
தகவல் திடுக்கிட வைத்தது - எம்
நினைவில் நீங்கள் என்றும் இருக்கின்றீர்கள்
செவிகளில் உங்கள் குரல் என்றும் ஒலிக்கிறது.

தவழும் வயதில் எம்மை
தாங்கிய உங்களிற்கு
உரிமைப் பந்தம் பிடிக்கக் கூட
கொடுப்பனவு இருக்கவில்லை
சொர்க்கத்தில் நீங்கள்
சோகங்களின்றி வாழ்ந்திட
சொக்கனை வேண்டுகின்றேன்.

**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

**க.கலைச்செல்வி + அரியதாசன்**
**க.கலைமதி**
**க.கரிகாலன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பில்லா குலவிளக்கு

கடந்த 2002-01.22ல் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து இறைவன் திருவடிகளை அடைந்த திருவாட்டி சின்னத்தங்கம் செல்லையா, எளிமையான, ஆனால் முழுமையான வாழ்க்கை வாழ்ந்த மூதாட்டியாவார்.

கிட்டத்தட்ட அறுபத்தைந்து ஆண்டுகளின் முன்னர் 1938ம் ஆண்டில் தன் கணவர் திரு.ப.செல்லையா அவர்களுடன் அவர் இவ்வூரிற் குடியேறினார். கந்தரோடையின் தவப்புதல்வன் - கொடைவள்ளல் டாக்டர் சி.சுப்பிரமணியம் அவர்களின் காணி பூமிகளைப் பராமரிப்பதில் உதவிய காலஞ்சென்ற திரு.செல்வலப்பா அவர்கள், இருபாலைச் செல்லையா என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இவரது கணவருக்கு சிறிய தந்தையார். இவரைத் தவிர நெருங்கிய உற்றார் உறவினர் வேறு எவரும் இவ்வூரில் இல்லாதபோதும், செல்லையா-சின்னத்தங்கம் தம்பதியினர், கந்தரோடையையே தம் சொந்த ஊராக வசித்து, இங்குள்ள மக்களின் சுக துக்கங்களில் முழுமையாகப் பங்குபற்றி அனைவருடனும் இரண்டறக் கலந்து வாழத் தொடங்கினார்கள்.

அவர்கள் இவ்வூருக்கு வந்தபோது, மூத்த மகன் இராசரத்தினம், கைக்குழந்தை ஏனைய மக்கட் செல்வங்களுக்குக் கந்தரோடையே பிறந்த ஊர்; சொந்தஊர்.

சிறந்த விவசாயியான திரு. செல்லையா, தன் கையே தனக்குதவி" என்பதிற் பூரண நம்பிக்கை வைத்து விவசாயத்தில் மிகுந்த ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் ஈடுபட்டுத் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பப் பொருளாதாரத்தைத் திருப்திகரமாகக் கட்டியெழுப்பி னார். கணவரின் விவசாய முயற்சிகள் வெற்றி அளிப்பதற்குத் திருவாட்டி சின்னத்தங்கம் அளித்த உதவியும் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கவை. அத்துடன் தன் பிள்ளைகளை நல்லவர்களாக வளர்த்து ஆளாக்குவதிலும் இவர் அதிக கவனம் செலுத்தினார்.

தன் கணவனை இழந்த பின்னர், தன் பிள்ளைகளின் அரவணைப்பில் இவர் வாழ்ந்தார், பேரப்பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதில், தன் பிள்ளைகளுக்கு உதவியாக இருந்தார்.

தெய்வ பக்தி மிக்க இவர், கந்தரோடை வற்றாக்கை அம்பாளையும் வீரகத்தி விநாயகப் பெருமானையும்தன் குல தெய்வங்களாகக் கருதி வழிபட்டு வந்தார்.

தன் பிள்ளைகளும் மருமக்களும் வாழ்க்கையில் நல்ல நிலையில் இருப்பதைக் கண்ட திருப்தியுடன் நோயிற் கிடந்து உழலாமல் இறுதி மூச்சை விட்ட திருவாட்டி சின்னத்தங்கம், இறைவன் திருவடி நிழலில் இனிதே மகிழ்ந்திருப்பார் என்பதற்கையமில்லை.

**கந்தரோரை** **சி. சிவசரவணபவன்**
**ஓய்வுபெற்ற அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி செல்லையா சின்னத்தங்கம்

ஈழத்தின் தலைநகரமாக ஒருகால் விளங்கிய கந்தரோடைக்கும் இருபாலைக்கும் நீண்ட காலத் தொடர்புகள் இருந்து வந்துள்ளமையை வரலாற்றுச் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. இருபாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு.ப.செல்லையா அவர்களின் சிறிய தந்தையாரான செல்லப்பா என்பவர் கந்தரேடையிலேயே வாழ்ந்து வந்தார். திரு. செல்லையா சின்னத்தங்கம் அவர்களைத் திருமணஞ் செய்து இருபாலையில் வசித்து வந்தார். சிறிய தந்தையார் இத்தம்பதியரைத் தம்முடன் கந்தரோடையில் வாழ வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். சிறிய தந்தையாரின் வேண்டுகோளை ஏற்ற செல்லையா தம்பதியினர் அவர் வீட்டிற்கு அருகில் உள்ள "கணக்கர் வளவில்" வீடு கட்டிக் குடியிருக்கலாயினர். "உழுதுண்டுவாழ்வதற் கொப்பில்லைக் கண்டீர்" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க உழவுத் தொழிலைத் திறம்படச் செய்து கந்தரோடையில் சீருஞ் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர்.

இத்தம்பதியர் செய்தவப்பயனாக மூத்தபுத்திரனாக இராசரத்தினம் அவர்களும் இரண்டாவதாக மனோரஞ்சிதம் என்னும் புத்திரியும் மூன்றாவதாகக் கமலாதேவியும் நான்கா வதாக இலங்கைநாதனும் ஐந்தாவது அருந்தவப் புதல்வனாக வைத்தியநாதனும் ஆறாவதாக ஞானதேவியும் ஏழாவது பிள்ளை யாக யோகநாதனும் எட்டாவது புத்திரியாக யோகாதேவியும் பிறந்தனர். தாய் தந்தையர் இப்பிள்ளைகளுக்கு வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக் கல்வியைக் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியா சாலையிலும், சிரேஷ்ட கல்வியைக் கந்தரோடை ஸ்கந்தவரோத யக் கல்லூரியிலும் கற்பித்தனர்.

மூத்த புத்திரனுக்கு எந்தக் குடும்பத்திலும் பெரும் பொறுப்பு உண்டு. அந்த வகையில் இராசரத்தினம் அவர்களும் இளம் வயதிலேயே தனியார் கம்பனி ஒன்றில் வேலைக்கு அமர்ந்தார். கொழும்பில் வெள்ளவத்தையில் 37ஆம் ஒழுங்கையில் 72ஆம் இலக்க வீட்டில் பல ஊழியர்கள் விடுதி அமைத்து வாழ்ந்து வந்தனர். அதில் ஓர் உறுப்பினராகத் திரு.இராசரத்தினம் 10 ஆண்டுகள் வசித்தார். விடுதியில் மாலை நேரங்களில் நண்பர்களுடன் உரையாடுவதும், உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுவதுமாக இருப்பார்கள். காலையில் நேரகாலத்துடனேயே ஒவ்வொருவரும் கடமைகளை முடித்துக் கொண்டு வேலைக்குச் சென்று விடுவர். அந்நேரம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் பணிபுரிந்த கரவெட்டியைச் சேர்ந்த திரு. க.கந்தசாமி அவர்கள், புகையிரதத்திணைக் களத்தில் கடமை புரிந்த அச்சுவேலியைச் சேர்ந்த திரு. இ.சௌந்தரநாயகம் அவர்கள், பிரதம எழுதுநராகக்கடமை யாற்றிய இருபாலையைச் சேர்ந்த திரு. வன்னியசிங்கம் அவர்கள். மத்திய வங்கியில் பணிபுரிந்த ஜெயேந்திரன் ஆகியோரும் மேலும் பலரும் இவருடன் விடுதியில் வாழ்ந்தனர். எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் இராசரத்தினம் பழகிவந்தார். பிற்காலத்தில் வடக்குக் கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திரு.க.கந்தசாமி அவர்கள் ஒரு நாள் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசலைக்குக் கடமையின் பொருட்டுவருகை தந்தார். கடமை நிறைவுற்றதும் கந்தரோடையைச் சேர்ந்த நண்பன் இராசரத்தினம் அவர்களின் வீடு அண்மையிலா இருக்கின்றது என வினாவினார். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருப்பார் என அங்கேயே கூட்டிச் சென்றேன். அவ்விடத்திலேயே திரு.இராசரத்தினம் அவர்களைக் கட்டித்தழுவி தனது நட்பை வெளிப்படுத்தியதை நேரில் கண்டேன். இவ்வாறு எந்தப் பெரியவர்களது நட்பையும் அன்பையும் பெற்றிருந்தார் என்பதை அன்றேயான் நன்கறிந்து கொண்டேன். கொழும்பில் அரசினர் வைத்தியசாலையில் 1968ஆம் ஆண்டு எனது தந்தையாருக்குச் சத்திர சிகிச்சைக்குத் திகதி குறிப்பிட்டுவிட்டனர். ஆனால் இரத்தம் வழங்க வேண்டியிருந்தது. அந்நேரம் இதை அறிந்த திரு.இராசரத்தினம் அவர்கள் அப்புத்துரை அண்ணைக்கு யானே இரத்ததானம் செய்கின்றேன் என ஆயத்தம் செய்தார். அப்போது இரத்தவங்கியில் போதிய இரத்தம் இருந்தமையால் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. ஆயினும் இச் செயல்மூலம் அவர் எவ்வாறு மற்றவர்களை நேசித்தார் என்பதைப்புரிந்து கொண்டேன். "தனக் கென வாழாதபிறர்க்குரியாளன்" என்றமுது மொழிக்கு இணங்க வாழ்ந்தவரே திரு. இராசரத்தினம் அவர்கள் இத்துணைச் சிறந்த பண்பாளனை, பிறரைநேசிப்பவரைப் பெற்று வளர்த்தெடுத்த பெருமை திருமதி.செ.சின்னத்தங்கம் அவர்களுக்கே உரித்தாகும். திரு.இராசரத்தினம் அவர்கள் பொன்னாலையைச் சேர்ந்த கிருஷ்ணர்தம்பதியரின் ஐந்தாவது புத்திரி ருக்குமணிதேவியை மணம் புரிந்து இல்லறம் நடாத்தி வருகின்றனர். தாயார் இவர்களுடனும் ஏனைய பிள்ளைகளுடனும் மாறிமாறி இருந்து தனது காலத்தைக் கழித்தார்.

அடுத்தவராகிய மனோரஞ்சிதம் க.பொ.த சாதாரண தரவகுப்பு வரைகற்றவர். கந்தரோடையைச் சேர்ந்த இராமு ஆச்சிமுத்து தம்பதிகளின் கனிஷ்டபுத்திரன் வீரசிங்கம் அவர் களைத் திருமணஞ்செய்து பிள்ளைகளுடன் வாழ்ந்துவருகின்றார். மேலும் பிள்ளைகளின் புத்திரர்களான பேரப்பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரவணைத்து பாடஞ்சொல்லிக் கொடுப்பதிலும், கதைகள் கூறுவதிலும் காலத்தைக் களித்து வருகிறார்.

கமலாதேவி கந்தரோடையைச் சேர்ந்த சுப்பையா தம்பதிகளின் மகனும் இ.போ.ச. வில் கடமையாற்றியவருமான திரு.கந்தசாமியைத் திருமணஞ் செய்து இருபெண்களையும் ஏகபுத்திரனையும் பெற்று வவுனியாவில் வாழ்ந்து வருகிறார். கணவர் கந்தசாமி அவர்கள் காலஞ்சென்று விட்டார்.

இலங்கைநாதன் தந்தையைப் போல விவசாயஞ்செய்து வருகிறார். இவர் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினைப் பெற்றுச் சில காலம் கடமையாற்றிவிட்டுத் திரும்பினார். இவர் ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி கோகிலாம்பிகை யை மணப்புரிந்து ஏகபுத்திரனைப் பெற்று வாழ்ந்து வருகின்றார். கந்தரோடை விவசாய சம்மேளனத்தின் தலைவராக இருந்தும் பணிபல புரிந்து வருகிறார்.

ஐந்தாவது புத்திரன் வைத்தியநாதன் அவர்கள் சுன்னாகம் தெற்குக் கிராமசேவை அலுவலராக அரும் பணியாற்றி வருகின்றார். இவர்தனது பிரிவில் வாழும் மக்களுக்கு வேண்டிய சேவைகளைச்செய்து வருகின்றார் என்றால் மிகையாகாது. இவர் இருபாலையைச் சேர்ந்த முத்துத்தம்பி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி சிவயோகம் அவர்களைத் திருமணஞ் செய்தார். சிவயோகம் லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் உயர் பதவிவகித்து வருகிறார்.

ஞானதேவி யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் கற்றுத் தேறிய சிறந்த தட்டெழுத்தாளர் ஆவார். இவர் சுன்னாகத்தைச் சேர்ந்த பண்டிதர் நாகலிங்கம் அவர்களின் புத்திரனும், இலங்கை வங்கியில் கடமை புரிந்தவருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ஜெகநாதன் என்பவரைத் திருமணஞ்செய்து நான்கு மக்கள் செல்வங்களைப் பெற்றார். இவர்கள் தற்போது கனடாவில் சீருஞ் சிறப்புமாக வாழ்கின்றனர்.

யோகநாதன் ஹாடி தொழில் நுட்ப நிறுவனத்தில் கற்றுத் தேறித் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்று கின்றார். இவர் உடுவிலைச் சேர்ந்த தம்பித்துரை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி தமயந்தியை திருமணஞ் செய்தார். பட்டதாரி ஆசிரியையான இவர் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே ஆசிரியப் பணிபுரிந்துவருகிறார். இவர்களுக்கு ஏக புத்திரனும் ஏக புத்திரியும் உள்ளனர். இவர்களுடனும் சிலகாலம் திருமதி. சின்னத்தங்கம் அவர்கள் வாழ்ந்து வந்தார்.

கனிஷ்ட புத்திரி யோகாதேவி மறவன்புல சட்டநாதர் தம்பதிகளின் மகன் மனோகரன் அவர்களைத் திருமணஞ் செய்தார். இவர்களுக்கு இரு ஆண்பிள்ளைகளும் ஒரு புத்திரியும் உள்ளனர். இக் குடும்பத்தினர் பிரான்சு நாட்டின் தலை நகராகிய பரிஸ் நகரத்தில் இன்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

இத்தனை பெருமைகளை உடைய பிள்ளைகளைப் பெற்ற செல்லையா சின்னத்தங்கம் தம்பதியினர் தம் பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வி அறிவு ஒழுக்கம் ஆகியவற்றை ஊட்டி வளர்த்தமையால் பாரோர் புகழக் கேட்டு மகிழ்ந்தனர். பிள்ளைகளும் தம்மைப் பெற்று வளர்த்தெடுத்த தாய்தந்தை யருக்கு எதுவிதக் குறைவும் ஏற்படாது பேணிக் காப்பதிலே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். "ஈன்ற பொழுதிற் பெரிதுவாக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்" என்ற வள்ளுவன் வாக்கு இணங்கப் பிள்ளைகள் பிறர் போற்ற வாழ்ந்தமையால் தாயார் சின்னத்தங்கம் அகமகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி.சின்னத்தங்கம் தனது பேரப்பிள்ளைகள். பூட்டப்பிள்ளைகளுடன் மாறிமாறி இருந்து காலத்தைக் கழித்தார். கந்தரோடை வற்றாக்கை அம்மன்பால் அளவு கடந்த பற்றுடையவர். வீரகத்தி விநாயகனையும் தரிசிக்கத் தவறுவதில்லை. பேரப்பிள்ளைகளுடன் ஆலயவழிபாடு செய்வதிலும் உற்றார் உறவினருடன் அளவளாவுவதிலும் பிற்காலத்தைக களித்தார். மூத்தபுத்திரி மனோரஞ்சிதம் அவர்களுடன் இரவு உணவு அருந்திவிட்டுக் கதைத்துக் கொண்டிருந்தார். திடீரென இயற்கை எய்தினர். நேற்று இருந்தவர் இன்று இல்லை என்ற பெருமையை உடையது இவ்வுலகம் என்று வள்ளுவர் கூறியது போல நேற்றிரவு இருந்த சின்னத்தங்கம் இன்று இவ்வுலகில் இல்லை. தனது 82 ஆம் வயதில் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அ.தற்பரானந்தன்**
**கோட்டக்கல்விப்பணிப்பாளர்,**
**உடுவில் கல்விக்கோட்டம்.**

**கந்தரோடை,**
**சுன்னாகம்,**
**21.02.2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

அமைதி கொஞ்சும் ஊராம் கந்தரோடையில் கணக்கர் வளவு எனும் இடத்தில் வாழ்ந்து வந்தவர் அமரர் செல்லையா சின்னத்தங்கம் அவர்கள். சின்னத்தங்கம் அவர்கள் கந்தரோடை நாகதம்பிரான் மீதும் ஆலடிப்பிள்ளையார் மீதும் வற்றாக்கை அம்மன் ஆலயம் மீதும் அளவற்ற பக்தி கொண்டவர். தினமும் மூன்று வேளையும் இறைவனைத் தொழுவதில் இன்பம் கண்டவர் ஆயிரம் பிறைகண்ட அமரர் அவர்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டு மக்கள் மருமக்களோடு மகிழ்வொடு வாழ்ந்து வந்தவர் இப்படியாக வாழ்ந்து வந்தது காலனுக்குப் பொறுக்கவில்லையோ கவர்ந்து விட்டான்.

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.'

என்ற குறள் வாக்கிற்கேற்ப இறைவனடி சேர்ந்து விட்டார் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்ப தோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இ. சோமேஸ்வரசர்மா**
**கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் கோவில்**
**ஆதீன கர்த்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயமாய் எவர்க்கும் இனிய செய்தவள்
# திருமதி செல்லையா சின்னத்தங்கம்

தெய்வம் அஞ்சி தீநெறி தவிர்த்து
அறநெறி வாழ்வை அமைத்திட்ட அம்மா
**செல்லையா சின்னத்தங்கம்** செம்மனத்தாள்
ஒப்பறு முத்தி பெற்ற இந்நாளில்
நயப்புறு தமிழில் நல்லது உரைப்போம்
ஏட்டுக்கல்வி பெரிதும் அறியாள்
மாட்டுறு அன்பாய் மானிலம் வாழ்ந்தவள்
இதயமாய் எவர்க்கும் இனியவே செய்தவள்
நிறைகுண மக்களை நிறையப் பெற்று
ஆலவிருட்சமாய் அழகுறப் படர்ந்து
சில புண்ணியராய் செழிக்க வாழ்ந்தவள்
தீதும் நன்றும் பிறர் தரா உயர்
வாழ்வை வையத்து வாழ்ந்து சென்றவள்
ஆத்ம சாந்திக்கு இறைஞ்சிடும் இந்நாளில்
இணைவோம் நாமே சாந்தி பெறுவோமே.

எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம்
(நிர்வாக அதிகாரி, – சமாதான நீதவான்)
பிரதேச செயலகம்,
வலி தெற்கு, உடுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப் பிறப்பில் காண்போம் இனி

விழுதுகள் பல விட்ட விருட்சமாய் நின்று நிழல் தந்து நினைத்த போதெல்லாம் சென்று இளைப்பாறிய அந்தத் தெய்வத் திருமேனி தீயுடன் சங்கமித்து திங்கள் ஒன்றாகிறது. தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை என்கிறார்களே. அந்த கோவிலில் நித்திய தெய்வமாகி விட்ட எமது நண்பனின் தாயை நாமும் நினைக்கின்றோம். எம் கண்முன்னே என்றும் களிப் போடு உலா வந்த அந்த அன்புத் திருவுருவம் தான் பெற்ற செல்வங்கள் தழைத்து ஓங்கி வாழும் வேளை களிப்புற்று நிலைத்து வாழ்வதினை பொறுக்காத காலன் அவரைக் கவர்ந்து சென்று விட்டான்.

காலத்தால் அழியாத நிர்மலமான பாசத்தை சொரிந்து பாலூட்டி சீராட்டி பலர் பாராட்ட தன் மழலைகளை வளர்த்து ஆளாக்கி உலக அரங்கிலே உலாவவிட்டு அவர் தம் உயிரோடு கலந்து விட்ட இவ் உறவை இப்பிறப்பில் இழந்தோம். எப் பிறப்பில் காண்போம் இனி.

அன்னையின் ஆத்மா அல்லல் அறுத்து ஆனந்தம் அளித்து எம் வீறகத்தும் விநாயகனின் பாதங்களில் சங்கமித்து சாந்திபெற இறஞ்சுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சின்னப்பா பேரின்பநாயகம்
களஞ்சியப் பொறுப்பாளர்
பல.நோ.கூ. சங்கம்
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சிறந்த இல்லத்தரசி

இற்றைக்கு 40 ஆண்டுகட்கு மேலாக அமரர் சின்னத்தங்கம் செல்லையா அவர்களை நன்கறிவேன். இவரது மகன் திரு. இராசரத்தினம் அவர்களுடன் கொண்ட நட்பின் காரணமாக இவர்களின் குடும்ப அங்கத்தவருள் ஒருவனாக வாழ்ந்து வருகின்றேன். கமத்தொழிலில் பாடுபட்டு உழைத்த அமரர் செல்லையா அவர்களின் வருவாய்க்கேற்ப மிகவும் சிக்கனமாக வாழ்ந்து தனது பிள்ளைகளைக் கண்ணியமாக வளர்த்தவர் அமரர் சின்னத்தங்கம் ஆவர். கணவனின் இன்பதுன்பங்களில் எல்லாம் சமபங்கு கொண்டு வாழ்ந்த இவரின் சிறந்த பண்பினால் தம் வயலில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டி ருக்கும் அனைவரிடத்திலும் மிகவும் அன்பாகப் பழகி மனத்தையும் புண்படுத்தாமல் வாழ்ந்த ஒரு சிறந்த இல்லத்தரசி என்றே கூறலாம்.

பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகப் பல்லாண்டுகள் வாழ்ந்து நன்மக்களைப் பேணி வளர்த்த பெருமையும், பேரப்பிள்ளைகள் பலரையும் கண்ட மகிழ்ச்சியும் கொண்டவர். எனது தாய் போன்ற இவரின் மரணச் செய்தி அறிந்து பெரிதும் கவலை கொண்டுள்ளேன். எல்லாம் எப்பவோ முடிந்த விடயம் என்ற சித்தர் வாக்கினை எண்வரித் தேற்றம் அடைவோமாக அன்னாரின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறி எனது அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தி அடைய வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கனக. புவனேந்திரநாதன்
ஓய்வு பெற்ற உப அதிபர்
ஸ்கந்தரோதையாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகத்தாய்

திருமதி செல்லையா சின்னத்தங்கம் அவர்கள் இறந்தார் என்பதை நினைக்கும் பொழுது எங்கள் நெஞ்சம் எல்லாம் வெடிக்கிறது.

Light has gone out to our lives there is darkness every where.

எங்கள் வாழ்க்கையிலிருந்த வெளிச்சம் இன்று அணை ந்து விட்டது. எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. இவரது இறுதி மரணச் சடங்குக்கு பெருந்திரளான மக்கள் வந்திருந்தார்கள். ஏனெனில் எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவார். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழிக்கிணங்க இவர் மிகவும் நோயற்றவராக வாழ்ந்திருக்கிறார். இவர் அன்பின் பிறப்பிடம், அறநெறியின் திருவுருவம், மாசற்ற மாணிக்கம், மாற்றுக் குறையாத தங்கம், இவர் எட்டுப்பிள்ளைகளைப் பெற்றுள்ளார். எல்லோரும் சீரும் சிறப்பும் செல்வாக்குடன் வாழ்கின்றார்கள். இவர் மக்களைப் பெற்ற மகராசி இந்த அம்மா 8 பிள்ளைகளைப் பெற்றார்.

8x10 மாதம் =80 மாதம் -7 வருஷம் கர்ப்பிணியாக இருந்தார்

7x 2 வருடம் = 14 வருஷம் மல, சலம் எடுத்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்திருக்கின்றார். 21 வருஷம் தனது பிள்ளைகளுக்கு அரிய தியாகங்களையாற்றி உள்ளார். தியாகத்தால் தம்மை வளர்த்தார் என்று இவரது மகன் செ.வைத்தியநாதன் கிராம சேவையாளர் எனக்குப் பலமுறை சொல்லியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துமாதம் சுமந்து பாலூட்டிச் சீராட்டி வளர்த்ததாய் அம்மாவின் அன்பை இந்த உலகத்தில் யார் தருவார்கள் பகல் இரவாய் விழித்தார், தவறுதல்களை மன்னித்தார் நாம் கண்ணாலே கண்ட தெய்வம் அம்மாதான் ஆழ்கடல் வற்றினாலும் அம்மாவின் அன்புக் கடல் வற்றாது. உலகத்திலிருக்கும் அத்தனை பவுண்களைக் கொடுத்தாலும் அம்மாவின் அன்பை வேண்ட ஏலாது உலகிலே. அதி உயர்ந்த பந்தம் ஒன்று உண்டென்றால் தாய் என்கின்ற உறவுதான் தாயின் காலைத் தொட்டுக் கும்பிட்டால் தான் சுவர்க்கம் என்று ஒரு ஆங்கில (பழமொழி) உண்டு தாய் என்கின்ற உறவுதான் எந்தப் பிரதி பலனையும் எதிர்பாராது முழுமையான அன்பினாலே தங்களது பிள்ளைகளுக்கு அரிய சேவைகளையும். தியாகங்களையும் செய்திருக்கின்றார். ஒரு குழந்தையின் வளர்ச்சிப்படியின் போது ஏற்படும் ஒவ்வொரு சந்தோஷம் மற்றும் வேதனைகளின் போது அன்பு மிகுந்து, ஆர்வம் மிகுந்து, மகிழ்ச்சி மிகுந்து, வேதனை மிகுந்து ஒரு தாய் தம் குழந்தையோடு தானும் ஒன்றாகி தாய் என்கின்ற ஸ்தானம் தான். நாம் கண்ணாலே கண்ட தெய்வம் இவரது மகன் வைத்தியநாதன் மனிதரிலே ஒரு மாணிக்கக்கல்லு

For dedication to duty, hard work, loyalty to the gramasevaka Mr. S.Vaithianathan has very few Parallels, He has put his mind, heart, social works, round the clock.

வைத்திய நாதன் அவர்கள் தனது கிராமசேவையாளர் தொழிலுக்கு அர்ப்பணம் செய்துள்ளார். உடல், பொருள் ஆவி அத்தனையும் அர்ப்பணித்துள்ளார். இவருடைய வாழ்க்கையே சுற்றியது கிராம சேவையாளர் தொழிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He is very polite punctual & a man with an ice-cool temperament, never arrogant.
இவர் எல்லோரிடமும் மரியாதையாய் பழகுவார். காலம் தவறாமல் கடமைக்கு வருவார் ஆணவம், திமிர், கொட்டம் என்பது இவரது அகராதியில் இல்லை
He has been dowing the work of
Two gramase vakas Two
gramasevakas rooled in to one.
vaithianathan the great..

இவர் ஒரு கிராம சேவையாளரின் வேலையைச் செய்யவில்லை இவர் இரண்டு கிராம சேவையாளரின் வேலையை செய்கின்றார்.
How ean I describe the Tremendoud services rendered by vaithianathan. It is like a blind man deseribing the rainbow
இவர் ஆற்றிய சேவையை நான் எப்படி வர்ணிப்பது ஒரு குருடன் வானவில்லைப் பார்த்து வர்ணிப்பது போல
I Salute vaithianathan for the hgh standard of service offered to the people of chunnakam

ஒரு உயர்ந்த தரமான சேவையை சுன்னாக மக்களுக்கு ஆற்றியதற்கு எனது மரியாதையை ஏற்கும் படி வைத்தியநாதன் அவர்களைக் கேட்கின்றேன். நிலக்கரிச் சுரங்கத்தக்குள் வேலைபார்ப்பவன் எப்ப வெளிச்சத்தைப் பார்ப்பேன் என்பதுதான். இந்த அம்மா அன்பாலும், கடமையாலும் பாசத்தாலும் தனது எட்டுப்பிள்ளைகளுக்கும் வெளிச்சத்தைக் கொடுத்தார்.

திரு.குலவீரசிங்கம்
(கிரிக்கட் அங்கிள்),
இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவலைகள்........

எனது நண்பனும் சுன்னாகம் தெற்கு கிராம சேவையாளருமாகிய திரு. செல்லையா - வைத்தியநாதன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி செல்லையா- சின்னத்தங்கம் அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

அன்னாரின் பிரிவு என்பது என் அன்னையின் பிரிவு போல என் உள்ளத்தில் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியது. என் நண்பனின் நேர்மை, அன்பு, உளத்தூய்மை, வரவேற்கும் பண்பு இத்தனையையும் காலம் சென்ற அன்னையின் குணாதிசயங்களை ஒத்ததாகவே இருந்தது. தான் தள்ளாத வயதிலும் திடகாத்திரமான அன்பு மொழியில் "தம்பி இங்கே வாங்கோ" என்று அழைக்கும்பாசமிகு அன்னையை எப்பிறப்பில் யான் காண்பேன் தன்சோக மிகு ஆரம்ப கால வரலாற்றைத் தான் பட்ட துன்பங்களைக்கூறும் பொழுது அவர் கண்ணில் நீர் சொரியும் அந்தக் காட்சி என் மனத்தைக் கலங்க வைத்தது மட்டுமன்றி என் மனத்திலே நீங்காத இடத்தையும் பிடித்தது. அம்மாவை இன்று பார்த்தேன், நேற்றுப் பார்த்தேன் என்று என் நண்பன் கூறும் பொழுது அவர்தன் தாய்ப்பாசம் என்னை நெகிழ வைத்தது. என் மகன் வைத்தி நேற்று வந்தான். இன்று வந்தான் என் பிள்ளைகள் என்னைக் குறைவின்றிப் பார்க்கின்றார்கள் என்ற பிள்ளைப் பாசத்துடன் கூடிய மனத்திருப்தி அவர் தன் குடும்பத்துடன் மகிழ்வாக வாழ, மன நிறைவாக வாழ வைத்தது என்றால் மிகையாகாது. தன் பிள்ளைகள் எல்லோரும் படித்து நல்ல நிலையில் வாழ்வதைக் கண்டு உளமார மகிழ்ந்து. அன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 82ஆவது வயதில் மிக ஆரோக்கியமாக இருந்தவர் திடீரெனக் காலமான செய்தியை என்னால் நம்ப முடியாமல் இருந்தது. இறப்பு என்பதை யாராலும் நிச்சயித்துக் கூறமுடியாது. ஆனால் தானும் தன் குடும்பமும் தான் வாழவேண்டும் என்ற குறுகிய சிந்தனை இல்லாமல் எல்லோரும் வாழ வேண்டும் என்ற அன்னையின் பரந்த மனப்பான்மை அவரை இறைவனின் பாதங்களில் பக்குவமாகச் சேர்த்திருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி அவர் தம் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எனது சார்பிலும் எனது குடும்பத்தினர் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி.சிவகுமாரன்
அதிபர், யா/குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி
ஏழாலை

2002.02.21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே உருவான சின்னத்தங்கம் ஆச்சி

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கிழக்கில் அமைந்த இருபாலை எனும் கிராமம் இங்கு விவசாயம், கைத்தொழில் போன்றவை சிறந்து விளங்குகின்றன. இங்கு அருகில் உள்ள தரவைக் கடலில் உப்பும் மற்றும் புகையிலை வெங்காயம் தென்னை போன்ற செய்பயிர்களும் மிக பழமைவாய்ந்த வான் பயிர்களான இலுப்பை, புளி, வேம்பு போன்றவையும் காட்சியளிக்கின்றன. இத்தகைய பெருமை மிக்க ஊரில் 1920ம் ஆண்டு வைகாசி மாதம் ஏழாம் திகதி அவதரித்தார். இவர் தனது 16வது வயதில் திரு செல்லையா என்பவரை திருமணம் புரிந்தார். இத் தம்பதியரின் இனிய இல்லற வாழ்வின் பேறாக 1937ல் இவர்களுக்கு குடும்பத்தை சிறக்க வைப்பதற்கென ஒரு ஆண்மகன் அவதரித்தார். இந் நிலையில் பண்டைய சரித்திர காலங்களில் தலைநகரங்களாக விளங்கிய இடங்களில் ஒன்றான கந்தரோடையில் வசித்த செல்லையாவின் சிறிய தந்தையாரான செல்லப்பாவின் அழைப்பை ஏற்று கந்தரோடையில் வந்து குடியேறினார்கள்.

இவர்கள் வசித்த வீடும் எனது வீடும் மிக அண்மையில் இருந்தன. இதன் பேறாக செல்லையா சின்னத்தங்கம் குடும்பமும் எமது குடும்பமும் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிட்டியது. காலப்போக்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு நான் இதே கிராமத்தில் வேறு இடத்தில் குடியமர்ந்த போதும் இவர்களின் குடும்பமும் அயலிலே வந்து குடியேறினர். எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபராயத்தில் நான் இவரின் மடியில் தவழ்ந்து விளையாடியது இன்றும் எனக்கு பசுமையாக உள்ளது. நான் எனது தாய் தந்தையரை இழந்து துன்பப்பட்ட வேளையில் என்னை அரவணைத்து பாசத்துடன் தடவியது எனது இளமை நினைவுகளை மீட்கச் செய்தன. அதிகம் பேசாது அன்புடன் பழகும் இனிய குணம் கொண்ட சின்னத்தங்கம் ஆச்சி சிவபதம் அடைந்தது மிகவும் வேதனைக்குரிய விடயம். இவரின் மறைவால் துயர் உற்று இருக்கும் இவரது பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும் உறவினர்களுக்கும் என் சார்பிலும் எமது சக ஊழியர்களான கிராம அலுவலர்களின் சார்பிலும் எமது இதய அஞ்சலி தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக

**மு. பாஸ்கரகுமார்**
**கிராம அலுவலர்,**
**டாக்டர் சுப்பிரமணியம்வீதி,**
**சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக தினங்கள்

| | | |
|---|---|---|
| பெப்ரவரி | 11 - | உலக நோயாளர் தினம் |
| | 14 - | காதல் தினம் |
| மார்ச் | 08 - | சர்வதேச மகளிர் தினம் |
| ஏப்பிரல் | 01 - | முட்டாள்கள் தினம் |
| மே | 01 - | தொழிலாளர்கள் தினம் |
| | 31 - | உலக புகைத்தல் தடை தினம் |
| யூன் | 03 - | உலக சுற்றாடல் தினம் |
| | 26 - | உலக போதை ஒழிப்பு தினம் |
| யூலை | 07 - | கூட்டுறவாளர் தினம் |
| | 11 - | உலக குடிசன தினம் |
| | 28 - | உலக அகதிகள் தினம் |
| செப்ரம்பர் | 08 - | சர்வதேச கல்வி அறிவு தினம் |
| | 16 - | சர்வதேச ஓசோன் தினம் |
| ஒக்ரோபா | 01 - | சிறுவர் தினம் |
| | 06 - | ஆசிரியர் தினம் |
| | 15 - | சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் |
| | 16 - | உலக உணவு தினம் |
| | 20 - | உலக விவசாய தினம் |
| | 24 - | ஐக்கிய நாடுகள் தினம் |
| | 31 - | உலக சிக்கன தினம் |
| டிசம்பர் | 01 - | உலக எயிட்ஸ் தினம் |
| | 03 - | உலக அங்கவீனர் தினம் |
| | 10 - | ஐக்கிய நாட்டு மனித உரிமைகள் தினம் |

J.M.றொற்றிக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகின் சிறப்புப் பெயர்கள்

| | | |
|---|---|---|
| 01. சீனாவின் துயரம் | - | குவாங்கோ நதி |
| 02. கறுப்பு மலர் | - | நெல்சன் மண்டேலா |
| 03. ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி (Turkey) |
| 04. ஆசியாவின் நோயாளி | - | சீனா |
| 05. உலகின் கூரை | - | திபெத் |
| 06. இந்து சமுத்திரத்தின் முத்து | - | இலங்கை |
| 07 ஏழுமலை நகர் | - | ரோம் |
| 08. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சர்லாந்து |
| 09. சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| 10. நடு இரவில் சூரியன் தோன்றும் நாடு | - | நோர்வே |
| 11. உலகின் சர்க்கரைக் கிண்ணம் | - | கியூபா |
| 12. ஐரோப்பாவின் தொட்டில் | - | சுவிற்சிலாந்து |
| 13. இருண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| 14. ஐரோப்பாவின் காப்பகம் | - | பெல்ஜியம் |
| 15. அரபுக்கடலின் ராணி | - | கொச்சி (இந்தியா) |
| 16. காற்றின் நகரம் | - | சிக்காக்கோ (அமெரிக்கா) |
| 17. பிரமிட்டுக்களின் நாடு | - | எகிப்து |
| 18. அழியா நகரம் | - | ரோமாபுரி |
| 19. புனித பூமி | - | பலஸ்தீனம் |
| 20. அதிகாலை அமைதி நாடு | - | கொரியா |
| 21. மரகதத் தீவு | - | அயர்லாந்து |
| 22. கனவுக்கோபுர நகரம் | - | ஒக்ஸ்போட் (இங்கிலாந்து) |
| 23. வெள்ளைக்காரனின் சவக்கிடங்கு | - | கினியாக் கடற்கரை |
| 24. பொற்கோல நகரம் | - | சான்பிரான்சிகோ (அமெரிக்கா) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தலைவி செல்லையா சின்னத்தங்கம்
இறைபதம் அடைந்தபோது வருகைதந்து
உதவியவர்களிற்கும் இறுதிக் கிரியைகளில்
கலந்து கொண்டவர்களிற்கும்
அவர்தம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை
செய்தவர்களிற்கும் மற்றும் அனைத்து
வழிகளிலும் முன் நின்று உதவிபுரிந்த
உற்றார், உறவினர்கள் அயலவர்கள்
நண்பர்கள் அனைவருக்கும்
எமது உளம்கனிந்த நன்றிகளை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

## நன்றி



ஆறுமுகம் வீதி,
கந்தரோடை,
21.02.2002

பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.




பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்.

~பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org